1979 மார்ச் 9] [திரு. ச. இராமச்சந்திரன்]

முன்பு தீவிர ஆலோசனைக்குப் பிறகு முடிவு எடுத்த பிறகும், எதிர்கட்சித் தலைவர்களும், விவசாயிகள் சங்கத் தலைவர்களும் விடுத்த வேண்டுகோளின்படி மீண்டும் ஆராய்ந்து சலுகை தந்து, அரசு இப்போது எடுத்துள்ள முடிவுகளை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பர் என நம்புகிறேன். வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான மின்வழங்கு திட்டங்களை விரைந்து நிறைவேற்றவும் தட்டின்றி மின்வழங்க ஏற்ற வசதிகளை உருவாக்கவும் மின்வாரியத்திற்கு ஒத்துழைப்பு தந்து இதுவரை மின் கட்டணம் செலுத்தாத விவசாயிகள் அனைவரும் மின்கட்டணங்களை விரைந்து செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[பிற்பகல் 1—30]

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இப்பொழுது அறிவித்தது, நேற்று நாம் சர்வ கட்சித் தலைவர்களும், விவசாய சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பேசும்போது நாம் எல்லோரும் சேர்ந்து சொன்னதற்கு மாறாக இருக்கிறது. இது தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள் மத்தியிலே இன்றைக்கு இருக்கிற பதட்ட நிலையை போக்குவதற்கு பதிலாக அதிகமான பதட்ட நிலையை ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். காரணம் நேற்று சொல்லும்போது உயர் மட்டக் குழு அது தனது அறிக்கையை கொடுக்கும் வரை பழைய நிலை நீடிக்க வேண்டும் என்று சர்வகட்சி தலைவர்களும் சொன்னார்கள் அதற்கு நேர் மாறாக இந்த அறிக்கை இருக்கிறது. இது நேற்று நாம் பேசியதற்கும், எல்லா அனைத்துக் கட்சித் தலைவர்களும் சொன்னதற்கும் மாறாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

114. சென்னையிலுள்ள திருவாரூர் (பியாட்டிடியூட்ஸ்) சமூக நல நிலையத்திற்குச் சொந்தமான TMZ-4478, MSX-5669, TMX-6713, TMY-2027, TMC-7323 ஆகிய வண்டிகளுக்கான வரி வீதத்தைக் குறைப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 29—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற 3203 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1979 மார்ச் 9

115. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1975–76 ஆம் ஆண்டிற்கான அய்ந்தொகைக் குறிப்பும் ஆதாய-இழப்புக் கணக்கும் [தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவன சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

இணைப்பு.

[32 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 312க்கான விடையைக் காண்க.]

விடை.

விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையினரால் பல்வேறு பயிர்களுக்கு வழங்கப்படும் மானியங்களின் விவரங்களும், யார் யாரால் மானியங்கள் வழங்கப்படுகின்றன என்னும் விபரமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

இந்த விவரங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியங்கள் சேர்க்கப்படவில்லை. ஏனெனில் அத்திட்டம் மத்திய அரசின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS